# Neuro 3

ஆசிரியர்/கள்: நரம்பியல் - குழந்தை மருத்துவம் பதிப்பு 06/11

## காய்ச்சலுடன் வலிப்பு
## பெற்றோருக்கான தகவல்

**காய்ச்சலுடன் கூடிய வலிப்பு என்றால் என்ன?**

- காய்ச்சலுடன் கூடிய வலிப்பு என்றால் (காதில் அல்லது மலவாசலில் 38.5°C) காய்ச்சலினால் விளைவாகும் திடீர்த்தாக்குதல்
- ஏறக்குறைய 100 பிள்ளைகளில் 5 பேருக்கு காய்ச்சலுடன் கூடிய வலிப்பு இருக்கும்.
- 6 மாதம் முதல் 6 வருட பிள்ளைகள் தாக்கப்படுகின்றனர். அதிக அளவாக 2வது வயதில் காய்ச்சலுடன் வலிப்பு ஏற்படுகிறது.
- இது பலவேளைகளில் பரம்பரையாக வருவதாகவும் அறியப்படுகிறது.
- காய்ச்சலுடன் கூடிய வலிப்பானதுடன் காக்காய் வலிப்பானது சேர்க்கப்பட மாட்டாது.
- மரபுவழிக் காரணிகளும் (பிறப்பிலேயே குழந்தையிடம் காணப்படுகின்ற) மற்றும் புறத்தூண்டுதல்களும் (உதாரணமாக: சுவாசவழி மேற்பகுதியில் வைரஸ் கிருமி பரவுதல்) ஒன்றிணைந்து தாக்குவது காய்ச்சலுடன் சேர்ந்த வலிப்புக்கு மூலகாரணமாகக் கருதப்படுகிறது.

**காய்ச்சலுடன் வலிப்பு எப்போது ஏற்படுகிறது? அதை நான் எப்படி அடையாளம் காணமுடியும்?**

- காய்ச்சலுடனான வலிப்பு சடுதியிலும் அநேகமாக காய்ச்சல் முதலில் அதிகரிக்கும் போதும் ஏற்படும். ஆனால் காய்ச்சலுடன் சேர்ந்த நோயின் போது எந்நேரமும் ஏற்படலாம்.
- பிள்ளைகள் சடுதியில் மயக்கமாகி சமச்சீரான வலிப்பைக் காட்டுவார்கள். சில சமயங்களில் விறைப்பாகவும் அல்லது முற்றிலும் தொய்ந்தும் விடுவார்கள். அப்படி செய்யும்போது கண்கள் திறந்தும், பலவேளைகளில் அவை பிறழ்ந்தும் காணப்படும்.
- அநேக வலிப்புடனான காய்ச்சலின் நீடிக்கும் நிலை 3 நிமிடங்களுக்கும் குறைவாக இருக்கும். பிள்ளைகளுக்கு வலிப்பு வருகிற சமயமும் அல்லது வழக்கத்திற்கு மாறான தசை இறுக்கமும் வலிப்பின் கால அளவாகக் கருதப்படுகிறது.
- காய்ச்சலுடனான வலிப்புக்குப் பிறகு பிள்ளைகள் தூக்க நிலையிலிருப்பார்கள். வலிப்பு தொடர்ந்தும் நீடித்திருக்கிறதென்று இதற்கு அர்த்தமில்லை.
- 15 நிமிடங்களுக்கு மேலாக வலிப்பு நீடிக்கும்போதோ அல்லது 24 மணி நேரத்தில் அடிக்கடி நேரும்போதோ அல்லது உடம்பின் ஒரு பக்கத்தை மட்டும் தாக்கும் போதோ அல்லது வலிப்புக்குப் பின் அரை பகுதி பக்கவாதம் ஏற்பட்டிருக்கும் போதோ மட்டுமே காய்ச்சலுடனான வலிப்பு சிக்கலானது என்று சொல்லப்படுகிறது.

**காய்ச்சலுடன் வலிப்பில் என்ன அபாயங்கள் அடங்கியுள்ளன?**

- அவை பரபரப்பாகத் தோன்றினாலும் காய்ச்சலுடன் கூடிய வலிப்புகள் தீங்கற்றவை.
- மேற்கொண்ட மூளை வளர்ச்சிக்கு காய்ச்சலுடனான வலிப்பினால் எந்தப் பாதகமான விளைவுமில்லை.
- காய்ச்சலுடன் கூடிய வலிப்பினால் உயிருக்கு ஆபத்து இருப்பதாகத் தெரியவில்லை.
- ஆயினும், அதிக நேரம் நீடிக்கும் காய்ச்சலுடன் கூடிய வலிப்பு தவிர்க்கப்பட வேண்டுமென்பதால் அவசர மருந்து உங்களுக்குக் கையளிக்கப்படுகின்றது. (கீழே பார்க்கவும்)
- பிற்காலத்தில் காக்காய் வலிப்பு வரக்கூடிய அபாயம் மிகக் குறைவு. (ஏறக்குறைய 4 சதவிகிதம்)
- காய்ச்சலின் காரணமாக அதன் பின்னணியில் ஆபத்தான நோய் இருக்கக்கூடும் என்பதால் நீங்கள் எப்போதும் ஒரு மருத்துவரை நேரில் சந்திக்கவோ அல்லது தொடர்பு கொள்ளவோ வேண்டும்.

Kinderspital
Spitalstrasse
CH -6000 Luzern 16

தொலை. 041 205 11 11 தலைமையகம்
ஃபாக்ஸ் 041 205 31 90

www.ksl.ch
www.kinderspital-luzern.ch

Kinderspital Luzern

# Neuro 3

luzerner kantonsspital
KINDERSPITAL LUZERN

**காய்ச்சலுடன் வலிப்பு மீண்டும் ஏற்படலாமா?**

- அனேக பிள்ளைகளுக்கு ஒரேயொரு காய்ச்சலுடன் வலிப்பே ஏற்படுகிறது.
- ஏறத்தாள 30 சதவிகிதம் பேருக்கு இரண்டாவதும் மற்றும் ஏறத்தாள 10 சதவிகிதம் பேருக்கு மூன்றாவதும் அதற்குமேலுமாக ஏற்படுகின்றது.

**காய்ச்சலுடன் கூடிய வலிப்பைத் தடுக்க நான் என்ன செய்ய வேண்டும்?**

- காய்ச்சலுடன் கூடிய வலிப்பைத் தடுக்க நடவடிக்கை ஏதுமில்லை. மேலும் கிரமமான முற்கூட்டிய தடுப்புமருந்தென காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளுமில்லை.
- சில சமயங்களில் காய்ச்சல் எனும் தொடர் நிகழ்வின் ஆரம்பத்திற்கு காய்ச்சலுடன் கூடிய வலிப்பு, முதல் அறிகுறியாகிறது.
- இரவு நேரத்தில் அடிக்கடி உங்கள் குழந்தையை விழிப்புடன் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு காய்ச்சலுடன் கூடிய வலிப்பை நீங்கள் கவனியாதிருந்தால் கூட இது எந்த உடல்நல பாதிப்பையும் ஏற்படுத்தாது. மறைவான காய்ச்சலுடன் கூடிய வலிப்பால் பிள்ளைகள் பாதிக்கப்பட்டதான வரலாறு ஏதும் அறியப்படவில்லை.
- காய்ச்சலுடன் கூடிய வலிப்புக்குப் பின் மேலும் அது பற்றிய விளக்கத்திற்கு மூளைமின்வரைவின் (EEG- எலெக்ட்ரோ என்ஸபாலோக்கிறாம்) கணிப்பு அல்லது மூளையின் எம்.ஆர்.ஐ. (மக்னெட் ரெசொனான்ஸ்) எப்போதாவது தான் அவசியமாகிறது.

**காய்ச்சலுடன் கூடிய வலிப்பின் போது நான் என்ன செய்ய வேண்டும்?**

- அமைதியாக இருங்கள்!
- வலிப்பு நேரமும் அதன் பின்பும் கூட குழந்தையைப் பக்கவாட்டாகப் படுக்க வையுங்கள். வலிப்புக்குப் பின்னர் சில குழந்தைகள் வாந்தி எடுக்கக் கூடும்.
- எக்காரணங்கொண்டும் உங்கள் குழந்தையைக் குலுக்கவோ, தாடையை வலுக்கட்டாயமாகத் திறக்கவோ, பற்களுக்கிடையில் பொருட்களைத் திணிக்கவோ, வாய்க்கு வாய் புத்துயிர் கொடுக்கவோ (வலிப்பு சமயம் பிள்ளைகள் நீலநிறமாகக் கூடும்) அல்லது தண்ணீர் தெளிக்கவோ கூடாது.
- உங்கள் குழந்தைக்குத் தீங்கிழைக்கக் கூடிய பொருட்களை உங்கள் குழந்தையிடமிருந்து அகற்றுங்கள்.
- வலிப்பு நீடிக்கும் நேரத்தை அளவிடும் பொருட்டு கூடுமான வரை உன்னிப்பாக நேரத்தைக் கவனித்து பாருங்கள்.
- வலிப்பு 2-3 நிமிடங்களுக்கு நீடித்தால், தயவு செய்து மலவாசலூடாக டியாசேபாம் ரெக்டியோல் கொடுங்கள் (உடல் எடை 20 கிலோவுக்கு கீழ் இருந்தால் 1 தடவை 5 மில்லிகிராம் - எடை 20 கிலோவுக்கு மேலிருந்தால் 1 தடவை 10 மில்லிகிராம்) 5 நிமிடத்தில் வலிப்பு நிற்காவிட்டால் நீங்கள் இரண்டாவது டியாசேபாம் ரெக்டியோல் கொடுத்துவிட்டு அவசர சிகிச்சை மருத்துவரைக் கூப்பிடுங்கள். (தொலைபேசி 144)
- நீண்ட நேர (20 நிமிடத்துக்கு மேலாக என்று பொருள்) காய்ச்சலுடன் கூடிய வலிப்பைத் தடுப்பதே இதன் குறிக்கோள்.
- உங்கள் குழந்தைக்கு உடனடியாக பரிசோதனை வேண்டுமா என்று அறிய காய்ச்சலுடன் கூடிய வலிப்புக்குப் பிறகு தயவுசெய்து உங்கள் மருத்துவருடன் கலந்தாலோசியுங்கள்.

மேலும் கேள்விகள் இருக்குமானால் உங்கள் குடும்ப மருத்துவரையோ, குழந்தை வல்லுனரையோ தொடர்பு கொள்ளலாம் அல்லது கலந்தாலோசிக்கக் கூடிய லுசர்ன் குழந்தை மருத்துவமனையின் 0900 554 774 என்ற தொலைபேசி எண்ணுக்குத் தொடர்பு கொள்ளலாம்.

Kinderspital
Spitalstrasse
CH -6000 Luzern 16

தொலை. 041 205 11 11 தலைமையகம்
ஃபாக்ஸ் 041 205 31 90

www.ksl.ch
www.kinderspital-luzern.ch